# 16

*சபை:*

# மூப்பர்களிடத்தில் இதன் உறுப்பினர்களின் கடமைகள்

## *மரியாதை செலுத்தல்*

1. ***மூப்பர்களிடத்தில் ஒருவர் தமது முழு உறவுமுறையை எவ்வாறு அறியலாம் (2 தீமோ. 3:16, 17)?***
2. ***பவுல் எதைக் குறித்துச் சகோதரர்களுக்குப் புத்தி கூறினார் (1 தெச. 5:12)?***
   - *அ. மூப்பர்களை "அறிதல்" என்பது எதனை அர்த்தப்படுத்துகின்றது? அவர்களை மதித்து, ஒப்புக் கொண்டு, உயர்வாக எண்ணுதல்.*
   - *ஆ. அவர்கள் எவ்வாறு மதிக்கப்பட வேண்டும் (1 தெச. 5:13)?*
     - *(1.) அவர்கள் ஏன் இவ்வாறு உயர்வாக மதிக்கப்பட வேண்டும் (1 தெச. 5:13)?*
     - *(2.) உறுப்பினர்கள், மூப்பர்களைப் பற்றி இழிவாய்ப் பேசவோ அல்லது அவர்களுடைய ஆளுகைகளை மதியாமல் இருக்கவோ செய்யலாமா?*
3. ***மூப்பர்களிடம் எப்பொழுதும் காட்ட வேண்டிய மதிப்புமிக்க செயல்கள் யாவை (எபி. 13:24)?***

## *ஆளப்படுகிறவர்களாய் இருத்தல்*

1. ***கண்காணிகளுக்கு எவ்வகையில் சித்தம் நிறைந்த நன்றியுணர்வு காண்பிக்கப்பட வேண்டும் (எபி. 13:7)?***
   - *அ. அவர்களின் விசுவாசத்தை எவ்வாறு மதிக்க வேண்டும் (எபி. 13:7)?*
   - *ஆ. கிறிஸ்து அவ்வளவு செயல் வலிவுடன் போதித்தது எவ்வாறு (1 பேது. 2:21)?*
   - *இ. மூப்பர்கள் எந்த அளவுக்குப் போலச் செய்யப்பட வேண்டும் (1 கொரி. 11:1)?*
2. ***ஆளுபவர்களின் விருப்பங்கள் மற்றும் கட்டளைகள் எவ்வாறு மதிக்கப்பட வேண்டும் (எபி. 13:17)?***

   *அவர்களுக்கு இவ்விதமாகக் கீழ்ப்படிய வேண்டியது ஏன் (எபி. 13:17)?*
3. ***பேதுரு "இளைஞர்களுக்கு" எவ்வாறு புத்தி கூறினார் (1 பேது. 5:5)?***

## தற்காக்கப்படுதல், கனம் பண்ணப்படுதல் மற்றும் ஆதரிக்கப்படுதல்

1. **எல்லாக் காலங்களிலும் பிரசங்கியாருடைய எண்ணப்போக்கு எப்படியிருக்க வேண்டும் (1 தீமோ. 5:1-3)?**
   *இந்தக் கட்டுப்பாடுகள் பிரசங்கியார்களுக்கு மட்டும் வரையறுக்கப் பட்டுள்ளதா?*
2. **மூப்பர்களின் நேர்மையானது எவ்வாறு தற்காக்கப்பட வேண்டியுள்ளது (1 தீமோ. 5:19)?**
   - *அ. ஆனால் கடிந்து கொள்ளப்பட வேண்டியவர் யார்? எவ்வாறு? ஏன் (1 தீமோ. 5:20)?*
   - *ஆ. தீத்து எவ்விதம் கடிந்து கொள்ள வேண்டியவராய் இருந்தார் (தீத்து 2:15)?*
3. **"நன்றாய் விசாரணை" செய்கிறவர்களை எவ்வாறு எண்ண வேண்டும் (1 தீமோ. 5:17)?**
   - *அ. மூப்பர்களின் இந்த விசேஷித்த தனிச்சிறப்பு யாருடன் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும் (1 தீமோ. 5:17)?*
     *இதைப் பற்றி வேத வசனம் கூறுவது என்ன (1 தீமோ. 5:18)?*
   - *ஆ. சராசரியான மூப்பர்களைத் திறனற்றவர்களாக்குவது எது? அவரது உலகப் பிரகாரமான பணி - வசனத்தை நெருங்கிப் போடும் சில விஷயங்களைக் குறிப்பிடுக (மத். 13:22).*
   - *இ. மூப்பர்கள் ஊழியத்திற்குத் தங்களின் முழு நேரத்தையும் ஒப்புவிக்க முடியவில்லையென்றால், அவர்கள் என்ன செய்ய வேண்டும்?*
     *அவ்வாறு செய்ய அவர்கள் முழு நேர ஊழியர்களைப் பணிக்கு அமர்த்திக் கொள்ள வேண்டுமா?*
   - *ஈ. சபையின் ஊழியத்தைத் தேவனுக்குப் பிரியமுள்ளதாக்குவது எது?*
     *அது (ஊழியம்) மூப்பர்களின் மேற்பார்வையின் கீழ் செய்யப்படும்படியாகக் காணுவதே ஆகும்.*

## சிந்தனைக்குச் சில வினாக்கள்

1. **மேய்ப்பர்கள் கவனிக்க வேண்டியவர்களாய் இருந்தால், மந்தை செய்ய வேண்டியது என்ன?**
2. **மூப்பர்கள் கண்காணிகளாய் இருக்கிறார்கள் என்றால், கண்காணிக்கப்படுகின்றவர்கள் என்னவாக இருக்கின்றனர்?**
3. **மூப்பர்கள் மந்தையைப் போஷிக்க வேண்டும் என்றால், உறுப்பினர்கள் என்ன செய்ய வேண்டும்?**
4. **மூப்பர்கள் வழிநடத்த வேண்டும் என்றால், உறுப்பினர்கள் என்ன செய்ய வேண்டும்?**
5. **மூப்பர்கள் ஆளுகை செய்ய வேண்டும் என்றால், உறுப்பினர்கள் என்ன செய்ய வேண்டும்?**

6. ***மூப்பர்கள் மந்தையைக் குறித்துக் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்றால், உறுப்பினர்கள் என்ன செய்ய வேண்டும்?***
7. ***மூப்பர்களால் மந்தை கவனிக்கப்படாது என்ற நிலையில் அவர்கள் மூப்பர்களாய் நிலைத்திருக்க முடியுமா?***
8. ***மூப்பர்களால் சபை ஆளப்படாத நிலையில் அவர்கள் ஆளுபவர்களாய் இருக்க முடியுமா?***
9. ***மூப்பர்களால் மந்தையானது போஷிக்கப்படாது என்ற நிலையில் அவர்கள் மந்தையைப் போஷிக்க முடியுமா?***
10. ***மூப்பர்களால் வழிநடத்தப்பட சபை மறுத்து விட்டால், அவர்கள் வழி நடத்துபவர்களாய் இருக்க முடியுமா?***
11. ***மூப்பர்களால் கண்காணிக்கப்படுகின்றவர்கள் கண்காணிக்கப்படாதிருந்தால், அவர்கள் கண்காணிகளாய் இருக்க முடியுமா?***
12. ***மூப்பர்கள் எவற்றில் முற்றிலும் சரியானவர்களாய் இருக்கின்றனர்?*** *மந்தையைக் கவனித்து, கண்காணிப்பதில், உறுப்பினர்களைப் போஷிப்பதில், மற்றும் மேன்மையான உதாரணங்களினால் ஆளுகை செய்வதில்.*
    - *அ. ஒழுங்கற்று நடக்கிற உறுப்பினர்களை எவ்வாறு இவர்கள் கையாள வேண்டும் (1 தெச. 5:14அ)?*
    - *ஆ. ஒழுங்கற்று நடக்கிறவர் சரியாக்கப்படா விட்டால், என்ன செய்யப்பட வேண்டும் (2 தெச. 3:6)?*
    - *இ. தெய்வீகக் கட்டளைகளை மதிக்காதவர்கள் பற்றிய விஷயம் என்ன (2 தெச. 3:14)?*